1972 மார்ச் 25]

மிகவாய்ந்த சாதனையைப் புரிந்து முதலிடத்தைப் பெற்றுள்ளது என்னும் மகிழ்ச்சி பொங்கும் செய்தியை, இம்மாமன்றத்தில் அறிவிக்கும் பேறு எனக்கு கிட்டியுள்ளது எனப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்தகைய சாதனையின் சராசரி உற்பத்தியளவு ஹெக்டேர் ஒன்றுக்கு 1,974 கிலோகிராம் ஆகும். இது, 1970-71-ம் ஆண்டு அனைத்து இந்திய சராசரி விளைச்சல் அளவான ஹெக்டேர் ஒன்றுக்கு 1,134 கிலோகிராம் அளவுடன் ஒப்பிடுகையில் மிகவுயர்ந்த சாதனையாகும். உயர்விளைச்சல் தரும் ரகங்களைப் போலப் பல்வகை விதைகள், தர விதைகள், இரசாயன உரங்களைச் சரி விகிதத்தில் பயிர்களுக்கு இடுதல், முனைப்பு நடவடிக்கைகள், மேம்படுத்திய தொழில்நுட்ப உத்திகள், மும்முர அணுகு முறைகள் இவை அனைத்துக்கும் மேலாக பயிர் பாதுகாப்பு ஆகியவை பாராட்டத்தக்க வகையில் கூட்டாகப் பலனளித்து இம்மகத்தான சாதனை உற்பத்தி கிட்டுவதற்கு வழிகோலின. 1971-72-ம் ஆண்டில் நமது இலக்கான 73 லட்சம் டன் உணவு தானிய உற்பத்தியை நாம் எய்த முடியுமென உறுதி யுடன் நம்பலாம். அதுமட்டுமல்ல, மக்கள் தொகை பெருகி வரும் நிலையிலும், உணவு உற்பத்தியில் தன்னிறைவு நிலையைத் தொடர்ந்து பேணுதல் இயலுமென நாம் மேற்கொண்ட தற்காலிக மதிப்பீட்டாய்வுகள் தெரிவிக்கின்றன. இவ்வாறு, நமது மதிப்பிற்குரிய மறைந்த பேரறிஞர் அண்ணு அவர்கள், உணவுத் துறையில் நாம் அடைய வேண்டுமெனக் காட்டிய இலட்சி யத்தை, நமது பேரன்பிற்குரிய முதல்வரின் திறமைசால் தலைமையின் கீழ் நாம் அடைய முடிந்துள்ளது.

வரும் ஆண்டிற்கான (1972-73) இலக்கு 75 லட்சம் டன் என வரையறுக்கப் பட்டுள்ளது. உழவர் பெருமக்களும் அரசும் இணைந்து நின்று, இடைவிடா மலும் உறுதியுடனும் உழைப்பதன் மூலம் நாம் நமது திட்ட இலக்கை அடைய இயலுமென நம்புகிறோம்.

பருவ மழை நிலைமைகள்.

1971-72-ம் ஆண்டில் வடகிழக்குப் பருவ மழையின் போதும் தென்மேற்குப் பருவ மழையின் போதும் இம்மாநிலம் முழுவதிலும் மழை நன்கு பெய்தது. சாதாரணமாக இம்மாநிலத்தில் கோடை மழையின் சராசரி அளவு 137.8 மி.மீ. தான்; ஆனால், 1971-ம் ஆண்டில் கோடை மாதங்களில் இம்மாநிலம் முழுவதும் பதிவான மாத சராசரி மழை அளவு 159.00 மி.மீ. ஆகும். வடகிழக்குப் பருவ மழை தொடக்கத்தில் சேலம், தருமபுரி, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் போதிய அளவில் பெய்ய வில்லை என்றாலும், பின்னல் டிசம்பரில் மும்முரமாக மழை பெய்ததால், நிலைமை சீரடைந்தது. இதன் மூலம் இந்த மாவட்டங்களிலும் கூட வெற்றிகர மாகப் பயிர்கள் விளைவிக்க ஏதுவாயிற்று. பொதுவாக இக்காலத்தில் மாநிலம்

முழுவதும் பதிவான மழையளவு 320 மி.மீ. ஆகும். ஆனால், இப்பருவ காலத்தில் பெய்யக்கூடிய சராசரி அளவு 307 மி.மீ. தான். இவ்வாறு மழையளவு சற்று உயர்ந்துள்ளது. செங்கற்பட்டு, தென்னார்க்காடு, வட ஆர்க்காடு, திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் பாசன வேர்க்கடலை, கலப்பினக் கம்பு, நவரை, நெல் ஆகியவற்றைப் பயிரிடுவதற்கான வாய்ப்புகள் பெருகி உள்ளன.

1971-72-ல் பயிர்கள் மீது பூச்சிகளோ நோய்களோ அதிக அளவில் பற்ற வில்லை. நெற்பயிரில் தோன்றிய முக்கிய பூச்சிகளாவன: தண்டு துளைக்கும் புழு, இலைச் சுருட்டை, ஜெஸ்ஸிட்ஸ் ஆகியன. தென் ஆர்க்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் நெற்பயிரில் நெல் கொலை நோய் (Paddy Blast), இலைப்புள்ளி நோய் ஆகியவையும் காணப்பட்டன. செந்நிறக் கம்பளிப் பூச்சி, வேர்கடலையில் சுருள் பூச்சி, பருத்தியில் செடிப் பேன், தத்துப் பூச்சிகள், காய் கறிகளில் வண்டுகள் ஆகியன முக்கியமாகக் காணப்பட்ட பூச்சிகளாகும். உரியகாலத்தில் பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டதால் இந்தப் பூச்சிகளும், நோய்களும் கட்டுப் படுத்தப்பட்டன.

உணவு தானிய உற்பத்தி அளவு

நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கப்பட்டது முதல், அதாவது, 1969-70-ம் ஆண்டு தொடங்கி தமிழ்நாடு வேளாண்மை உற்பத்தித் துறையில் மகத்தான முன்னேற்றம் கண்டுள்ளது. மிகு விளைச்சல் தரும் ரகங்களைப் பயிரிடும் திட்டம், பல் பயிர்த் திட்டம், பிற மும்முர வளர்ச்சி அணுகு முறைகள் ஆகியவற்றை விரைவுபடுத்தியதன் விளைவால், 1970-71 ஆம் ஆண்டில் உணவு தானிய உற்பத்தி அளவு 70.30 லட்சம் டன் ஆக உயர்ந்தது. இதுவரை இம்மாநிலத்தின் உற்பத்திச் சாதனைகளில் இதுவே மிக உயர்ந்த சாதனையாகும். 1968-69-லிருந்து அரிசி உற்பத்தி படிப்படியாக உயர்ந்துள்ளது. 1970-71-ல் அரிசி உற்பத்தி 53.03 லட்சம் டன்னுக்கு உயர்ந்தது. இது நமது மாபெரும் சாதனையாகும்.

1971-72-ல் எதிர்பார்க்கப்படும் உற்பத்தியளவு கீழே காட்டியுள்ளவாறு 73 லட்சம் டன்னாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது :—

	லட்சம் டன்கள்
அரிசி	54.00
சிறுதானியங்கள்	17.00
பருப்பு வகைகள்	2.00
	73.00